ஓம்
சிவமயம்

சிவனடிச் சிவா



யாழ் கிழக்கரவை வாசகரும், தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவருமான

# அமரர் முருகேசு சிவசிதம்பரம்

அவர்களின் பிரிவு குறித்த

# நினைவுமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணம்



யாழ் - கீழைக்கரவை வாசரும்
தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும்
கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும்
சிம்மக்குரலோன், உடுப்பிட்டிச் சிங்கம்
என வழங்கப்பட்டவருமான
அமரர்

# முருகேசு சிவசிதம்பரம்

அவர்களின்
பிரிவு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்தகன்ற அரசியல் ஞானம்
சூழ்ந்த இனத்துயர் துடைக்கும் ஆவல் -
வாழ்ந்த காலப்பணியாகக் கொண்டு
வீழ்ந்து அரணடியில் அமைதி கண்ட

மண்ணின் மருந்தாக

20 - 07 - 1923



விண்ணின் விருந்தாக

05 - 06 - 2002

அமரர் நியாயவாதி

# முருகேசு சிவசிதம்பரம் (பா.உ)

(முன்னாள் உபசபாநாயகர்)

திதி நிர்ணய வெண்பா

ஆண்டுசித்ர பானுதனில் ஆகும்வை காசியிலே
ஈண்டபர பக்கதசமிதிதி ~ பூண்ட புகழ்ச்
சிம்மக் குரலோன் சிவசிதம் பரம்சிவனார்
அம் பொன் அடிசார் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா நீங்கள் எங்களுடன்..........

எங்கள் குலம் குணக்குன்றின் உச்சியில் நிற்கக் காலங் காலமாக வழி காட்டிய எங்கள் குலவிளக்கு நீங்கள். நீங்கள் தந்த பிச்சை தான் எங்களின் இன்றைய பெருவாழ்வு. நீங்கள் உடல் நலம் குன்றியிருந்த காலத்தில் நாங்களும் உளம் நலிந்து வேதனையுடன் வாழ்ந்து கொண்டிருந்தோம். நீங்கள் இலங்கை சென்று இந்த தள்ளாத வயதிலும் தமிழினத்துக்கு உழைக்கச் சித்தமாகி விட்டீர்களே என்று உடல் சிலிர்த்தோம். சென்ற ஆண்டு 2001 இறுதியில் இலண்டனிலிருந்து உங்களைக் காண ஓடோடி வந்தோம். பல ஆண்டுகளின் பின் உங்கள் குடும்பமே ஒன்றாக இணைந்து கூடிக் குலாவி மகிழ்ந்ததைக் கண்டு உங்கள் உள்ளம் பூரித்ததைக் கண்டு நாமும் மகிழ்ந்தோம். அடுத்த தடவை உங்களை இலங்கையில் சந்திப்போம் பிறந்த மண்ணில் சில நாட்களை உங்களுடன் கழிக்கலாம். 'அப்பா, மாமா, அப்பப்பா' என்று வாய் நிறைய அழைத்து உங்களை மகிழ்விக்கலாம் என்று ஆவலோடு காத்திருந்தோம். ஆனால், அந்த ஆவல் அல்லல் நிறைந்து ஆவி பிரிந்த நிலையில் காண வைத்தது விதி. பிறந்த மண்ணில் மகிழ்வுடன் கால் வைக்க முடியாமல் மனச் சுமையுடன் தாங்கொணாத் துயருடன் எங்கள் மண்ணில் கால் பதிக்க வைத்தது விதி. எங்கள் குடும்பத் தலைவனை தங்கள் அன்புருவை இழந்து தவிக்கிறோமே. அப்பா, உங்களுடைய எத்தனையோ வேலைகளுக்கு மத்தியிலும் எங்களை மறக்காது, எங்கள் நலனில் அக்கறை காட்டி, எங்களுக்காக இறைவனை வேண்டி எங்களுக்கும் பெருவாழ்வு தந்தீர்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் புத்தகமும் கையுமாக இருக்கும் நீங்கள் சின்னஞ்சிறு வயதிலேயே அந்த நல்ல பழக்கத்தை எனக்கும் கற்றுத் தந்தீர்கள். நீங்கள் தியானத்தில் இருக்கும் போதும் கூட நான் அருகில் இருந்து பத்திரிகையில் வரும் "காட்டூன்" படிப்பேன். புரியாதவற்றை புரிய வைப்பீர்கள். இன்றைய எனது ஆங்கிலப் புலமைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணகர்த்தா நீங்கள். படுசுட்டியாக நான் இருந்த காலத்தில் குளிப்பாட்டுவதிலிருந்து அனைத்தையும் எனக்காகச் செய்தீர்கள். எத்தனை சிரமப்பட்டீர்கள். கடைசிக் காலத்தில் எனது அபிப்பிராயங்களைக் கேட்டுப் பெருமைப் பட்டீர்கள். என்னையும் பெருமைப் படுத்தினீர்கள். உங்களின் பழுத்த அனுபவம் நீங்கள் தந்த அறிவுரை உங்கள் எளிமை, உயர்ந்த குலப்பண்பு, எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் காட்டிய தன்னலமற்ற அன்பு இவை இன்றுவரை எம்மை வழி நடத்தியது போல இனியும் உங்கள் ஆத்ம சக்தி எங்கள் உள்ளத்தில் தெய்வமாக நின்று எம்மை வழிகாட்ட வையுங்கள். எங்களுடன் என்றும் வாழுங்கள்.

**மகன், மருமகள்.**

அப்பப்பா உங்கள் குலம் விளங்க வந்தவன் நான் என்பதை என்றும் மறவேன். உங்கள் புகழ் வளர உங்கள் ஆத்மாவின் ஆசியுடன் வாழ்ந்து காட்டுவேன்.

**பேரன் தினேஷ்.**

உங்கள் அன்புச் செல்வங்களுக்காக உங்கள் ஆத்ம சாந்திக்காக உங்களுடன் வாழ்ந்த நினைவுகளுடன் உங்களை நாடி வரும் வரை வாழ்ந்திருப்பேன்.

**மனைவி சாரதா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வாழ்ந்த வரலாற்றை, எங்களை வாழவைத்த பான்மையைத் திரும்பிப் பார்க்கிறோம். நாம் இணைந்த வாழ்வைத் தொடர மனம் நிறைந்த ஆசிகள் நல்கினீர்கள். உளமார வாழ்த்தினீர்கள். உங்கள் வழிபாடும் வாழ்த்துக்களும் எங்களை ஆசானாய்ப் பேராசானாய் கலாநிதியாய் இன்னும் உயரச் செய்து கொண்டிருக்கின்றன. உங்கள் உடல் நலக் குறைவால் எங்களுடன் வாழ்ந்த அந்த நான்கு ஆண்டுகளும் எங்கள் இதயத்தை விட்டகலாத நாள்கள். எத்தனையோ தடவைகள் காலன் தன்கைவிரலால் தங்கள் கதவினைத் தட்டும் சத்தங்கேட்டோம். எங்கள் அரிய முயற்சிகளினால் கதவு திறந்து அவன் உங்களை அணுகாவண்ணம் காத்து வந்தோம். அதனால் தானோ என்னவோ இம்முறை எங்களை விட்டு வெகுதூரம் செல்ல வைத்தான் அந்தக் காலன். உங்கள் பேரன்பை, உங்கள் அறிவுரைகளை, மேடையில் சிம்மக்குரல் எழுப்பினாலும் இல்லத்தில் இதமாக அரவணைக்கும் அந்த இனிய குரலைக் கேட்கும் வாய்ப்பை இழந்து தவித்தாலும் உங்கள் ஆசிகள் எங்களை வாழவைக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்றும் உங்கள் ஆத்மா சாந்திக்காய் வேண்டி நிற்கிறோம்.

**மகள், மருமகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்குப் பெருமை தந்த அப்பா, பெரிய அப்பா, பேரன்பு கொண்ட அப்பா, நீங்கள் அதனால் எனக்குப் 'பெரியப்பா' ஆகினீர்கள். உலகிலேயே எனக்கு மிகவும் பிடித்த அப்பா என் பெரியப்பா தான். நீங்கள் என்னுடன் என்றும் இருக்க வேண்டும் என்பதற்காக உங்களைக் குழந்தையாக்கி குளிப்பாட்டி, மருந்து தந்து கவனித்தேன். என்ன செய்தும் நீங்கள் என்னைவிட்டுப் போய் விட்டீர்கள். ஏன்? என்பேரனுக்கு இலங்கைச் "சொக்லேட்" என்றால் நல்ல விருப்பம் என்று கூறி வருபவர்களிடம் பெட்டி பெட்டியாக அனுப்புவீர்களே. 'இனியார் அனுப்புவார்கள்' என்று எண்ணியா வைத்தியசாலையில் மரணப்படுக்கையில் இருந்த அந்தக் கடைசி நேரத்திலும் 'சொக்லேட்' கொடுத்தனுப்பினீர்கள். எப்படி இருந்தது சாப்பிட்டாயா என்று கேட்கு முன்பே எங்கோ போய்விட்டீர்களே பெரியப்பா. எங்கே?

உங்கள் உடலை ஏந்திய ஊர்தி ஊர்வலம் வந்த போதெல்லாம் என்ன புகழும் பெருமையும் இருந்தென்ன எனக்கு என் பெரியப்பா இல்லையே என்று இதயம் அழுதது. நான் வேதனைப்படக்கூடாது என்பதற்காக கடைசி மூச்சுவரை சிரித்துச் சிரித்துப் பேசினீர்களே! இன்று என் இதயம் கலங்க உங்களால் தாங்க முடிகிறதா? எப்படி? என் பேரனுக்கு பெரிய வீடு கரவெட்டியில் காத்திருக்கிறது என்ற நீங்கள் என்னைக் கூட்டி வராமல் நாங்கள் உங்களைக் காவிக்கொண்டு வர வைத்தீர்களே. எதற்காக? பெரியப்பா உங்கள் உடல் சாம்பலாகித் தண்ணீரில் கரைந்தாலும் எங்கள் உள்ளத்தில் என்றும் நீங்கள் இருக்கிறீர்கள் என்றும் இருந்து எம்மை நல் வழியில் செல்ல வைப்பீர்கள். எங்களை விட்டு எங்கும் போய் விடாதீர்கள்.

**பேரன் தயாபரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சிவா

வட மறவர் ஆட்சி நிலம் வடமராட்சிப் பிரிவில்
தொடரறமும் கல்வி நலம் சூழ்பதியாம் கரவெட்டி
பதினெட்டாம் நூற்றாண்டுப் பிற்பகுதி, இந் நிலத்தில்
அதிபதியாய் மணியகாரன் பெயரால் இருந்தவர் தான்
சித்தமணியப்பாவும் பொன்னையா மணியமுமாம்
தென்மராட்சிப் பிரிவு சித்தமணியப்பாவும்
இந் நிலத்தில் மற்றவரும் இருந்தரசு ஓச்சினரே
சித்த மணி அப்பாவின் தவமகனார் முருகேசு
உத்தமனார் உடையாராய் உயர் நிலையில் இருந்ததனால்
பொன்னையா மணியகாரன் புதல்வி சிவபாக்ய
நன் மணியை மணந்தறங்கள் நன்றாற்றிப் பெற்ற மகன்
சிவ சிதம்ப ரப் பெயராற் திசையெட்டும் புகழுற்றார்
தவ விக்னேஸ் வரா அவரின் தவக்கல்வி நிலையமென்பர்
சட்டத் துறையிலே தனிமுத்திரை பொறித்து
எட்டுத் திசையறிய இருந்திட்ட வேளையிலே
சிங்கப்பூர்ப் பொன்னப்பா பெற்ற தவச் சாரதா
தங்க மகள் தனை மணந்து தவ நெறியில் வாழ்ந்திருந்து
பொறியியலின் துறை புகுந்த சத்தியேந் திராவுடனே
அறிவரசி கலாநிதி நிராஞ்சலியும் அன்பு மக்கள்
எனப் பெற்றுப் பூரித்த எமதன்பர் சிவாவன்றோ
ஏராண்ட பெருமரபின் ஏற்ற மிகும் எங்கள் சிவா
பாராண்ட அவையத்துப் பா.உ ஆய்ப் புகழ் பதித்தார்
ஆற்றல் தனைக் கண்டு உப சபா நாயகராய்
ஏற்றனர் நம் ஏந்தல் புகழ் உச்சியிலே நின்றாரே
கற்பு நலக் கமலினியை காதல் மகன் துணைவியாய்
பற்பலர் சூழ் சபையிடத்து போற்றி இணைய வைத்தார்
பேராசான் தேவராஜ் பெரும் புலமைக் கலாநிதியை
ஆராத அன்புடனே மருமகனாய்க் கண்டாரே
மகன் வழியால் வந்ததினேஷ் மகள் வழியில் தயாபரனும்
சுகம் பெருக பேரர் எனத் தான் கண்டு பூரித்தார்
உடுப்பிட்டி நல்லூரில் உயர் பாராளு மன்றத்தின்
எடுப்பான எம்பி என இலங்கி நலம் புரிந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலலினொடு, தச்சையமர் விநாயகனை நிலம் வீழ்ந்து
நல்லுதயம் பாகாக நிதம் கரையப் பணிந்ததுவும்
நல்லூரான், சன்னிதியான், அத்துளுவில் அம்பாளை
வல்லிபுரத் தாழ்வாரை வாயார, மனமார
வாழ்த்தியதும் வணங்கியதும் நித்ய நிகழ் வென்போமே
'தாளங் குழி முருகன் தன்னடியும் போற்றாதே
வாழும் வாழ் வதுவாழ்வோ' என்று வணங்கி நின்றார்
உடுப்பிட்டிச் சிங்கமிது உயர் மேடை ஏறி விட்டால்
தடுத்து நிறுத் திடமுடியாச் சிங்கநா தம் பொழியும்
பணிவன்பு இறைபக்தி பொழுதெல்லாம் தொண்டு மனம்
அணியென்று கொண்ட அந்த அன்புருவச் சிவா அரனார்
சீரடியைத் தேடி நடந் துயர் வுற்றார் ஆகையினாற்
பேரமைதி பெறுக வெனப் பரனடியைப் பரவுவமே

"சிவன் என யானுந் தேறினேன் காண்க
அவன் எனை யாட் கொண்டருளினன் காண்க"
~திருவாசகம்~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதல்ஐந் தெழுத்துத் தெளிவாய்
பொருந்தவே எந்தன் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைத்தான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுகத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடித்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தேஒன்பது
வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூஷ்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலம்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிறகணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## திருஞான சம்பந்த சுவாமிகளின் தேவாரம்

### திருப்பிரமபுரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபுசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

**பொது.கோளறுபதிகம்** **பண்: பியந்தைக்காந்தாரம்**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

**பண்: காந்தாரம்**

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் திருநீறே

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையிலுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

காண வினியது நீறு கவினைத் தருவுது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே

பூச வினியது நீறு புண்ணியமாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் றிருநீறே

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே

மாலொ டயனறி யாத வண்ணம முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

**திருவதிகைவீரட்டானம்** **பண்: கொல்லி**

கூற்றா யினவாறு விலக் ககலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே

**கோயில்** **பண் : திருவிருத்தம்**

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த
மானிலத்தே

**பண் : காந்தாரபஞ்சமம்**

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றாலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே

இல்லக விளக்கது விருள்கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாத றிண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைத்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

**திருவெண்ணெய்நல்லூர்** **பண்: இந்தளம்**

பித்தாபிறை சூடிபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன் மனத்துன்னை
வைத்தாண் பெண்ணை தென்பால்வெண்ணெய்
நல்லூ ரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி
யல்லேனென லாமே

**திருக்கோளிலி** **பண்: நட்டராகம்**

நீள நினைந்தடியே னுனை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம் பெருமான் அவை
அட்டித் தரப்பணியே

**பண் : நட்டபாடை**

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்க சுவாமிகள் திருவாசகம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
மல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தாருக்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிப்பார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பணியான்
கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகலவிக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோறு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலாவுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீராயுருக்கியென் னாருயராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா மல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈத்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தயெஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையிற் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதி வாய்க் கேட்டருமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்வன் ஏதேனும்
ஆகாள் கிடந்தான் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும் போதெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்கு
கூசு மலர்ப் பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோர் எம்பாவாய்

முத்தன்ன வெண் நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுததெனன்றள்ரித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடமை எல்வோம் அறியோமே
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்

ஒண்ணித் தல நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
வண்ணக்கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக் கொள்ளவா சொல்லுவோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப் பொருளை
கண்ணுக் கினியானைப் பாடிக்க சிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனேசிவனே யென்று
ஏலமிடினும் உணராய் உணராய் காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான் வார் கழல் பாடி வந்தோர்க்கும் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந்தங்கோனைப் பாடேலோர் எம்பவாய்

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னா என்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய்
உன்னானை யென்னரையான் இன்னமுதன் றெல்லாமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பவாய்

கோழி சிலம்ப சிலம்புங் குரு கெங்கும்
எழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சொதி கேழில் பரங்கருணை
கெழில் விழும்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவர் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந்துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தான் தன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன் பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்

மொய்யார் தடம் பொய்கை புக்குமுகேரென்ன
கையாற் குடைந்து குடைந்துன் கழல் பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா வெண்நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்த்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர் கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன் நற்றில்லைச்சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தன் இவ்வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும்பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பவரஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
த்திகமும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீராடேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கல்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழமாட
சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப்பொருள் பாடி அப்பொருளாமா பாடிச்
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

ஊரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரை தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொரவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையான்
என்னத்திகழ்ந் தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கணவன் பால்திசை முகன் பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர்இன்பம்நம் பாலதாக
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழ
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றால் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் காப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணார்முகமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இம்பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்(கு)அப்பழஞ்சொற் புதுக்குமெய் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பரல்லார் தோள்சேரற்க
எங்கை உனக்கல்லாதெப் பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்(கு) இப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விட்டேன் உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே

**திருவேசறவு**

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

## திருவிசைப்பா

**கோயில்**

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே!
தெளிர்வளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோயில் பண்: புறநீர்மை

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்து
மேழையேற் கென்னுடன் பிறந்த
வைவரும் பகையே யார்துணை யென்றா
லஞ்சலென றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரும் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய்! மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

சிவசிவ வென்கிலார் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே

## பட்டினத்தார் பாடல்

**திருத்தில்லை**

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே
காலை யுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டுச்சியிற்
கால வுபாதி பசிதாக மாமுற் கஞ்சிதமா
மாலை யுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
ஆலமு கந்தரு ஏம்பல வாவென்னை யாண்டருளே

ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தமைப்
போற்றா தவர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்தில்
சோற்றாவி யற்றுச் சுகற்றுச் சுற்றத் துணியுமற்றே
ஏற்றாலும் பிச்சை கிடையாம லேக்கற் றிருப்பார்களே

## கபில தேவர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணின் பணிமின் கனிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந் தோதுதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா யேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியாய் நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## முருகன் துதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் அளித்துக் – கதித் (து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக :
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலிமுழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகமொக
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகுவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரம்மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என் இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் அனைய காக்க
அரையிருள் தன்னில் வச்சிரவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணர்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியின் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சுவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட் ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனை
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது ஆகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்ட திக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்து அடி
அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரலங்காரம்

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே

நாளென் செயும்வினை தானென் செய்யுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
நாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே

## திருப்புகழ்

**(விநாயகர் துதி)**

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திரு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடனச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ஏறுமயி | லேறிவிளை | யாடுமுக | மொன்றே |
| ஈசனுடன் | ஞானமொழி | பேசுமுக | மொன்றே |
| கூறுமடி | யார்கள்வினை | தீர்த்தமுக | மொன்றே |
| குன்றுருவ | வேல்வாங்கி | நின்றமுக | மொன்றே |
| மாறுபடு | சூரனை | வதைத்தமுக | மொன்றே |
| வள்ளியை | மணம்புணர | வந்தமுக | மொன்றே |
| ஆறுமுக | மானபொருள் | நீயருளல் | வேண்டும் |
| ஆதியரு | ணாசல | மமர்ந்த | பெருமாளே |

# அம்பாள் துதி

## சகலகலா வல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழ மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 03

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நாற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.
04

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 05

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 07

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 08

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவ
ரார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே. 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே. 10

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## துர்க்கை

ஆதியா யந்தத்தி னந்தமாய் நின்றோர்க்குப்
பாதியா யொன்றாய்ப் பலவாகிப்பல்லுயிராய்ப்
பேதியா நின்றாய் பெருமாட்டி நின்பெருமை
சோதியா நின்றார்க் கெளிதன்றே துல்லவமே.

## இலக்குமி

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின்மேனித் திருவேவேலை
அங்கணு லகிருள் துரக்கு மலர்க்கதிராய்
வெண்மதியாய் யமரர்க்கூட்டும்
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின்மண்ணில்
எங்குளைநீ டீணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்பதம்மா

## விஷ்ணு துதி

மரகத மேனி மாலே போற்றி
உரகரி வாகன உன்தாள் போற்றி
தாமரை புரையும் தாள்களைப் பற்றி
ஏமமாய்ப் பவக்கடல் ஏறிட அருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நின்னருளாலே நின்னைப்பணிந்தனனே

## வெல்லன் விநாயகர்

பார்ந்தேன் பணிந்து பரவசமாகிப் பராவி நின்று
சேர்ந்தேன் திருமலர் சேவடி தன்னயல் சேவித்தனன்
ஆர்ந்த பிறவி அழித்தே கதிபெற அண்மி நின்று
வார்த்தேன் உகுபுனல் கண்ணில் ஐயா வழங்கருளே

## தச்சை விநாயகர்

நீயே யலாதொரு தெய்வம் உளதோ நிலவுலகில்
நாயா யலையும் மனிதர் தமக்கருள் நல்கு தற்குக்
காயா உளமோ உடையா யிரங்கும் கருணையனே
வாயால் மனத்தால் உடலால் வழுத்தினன் வந்தருளே

## தாளங்குழி முருகன்

வேலையை விட்டா யென்ற வேளையிற் சூரனுமோ
வேலை விட்டானென்பர் சொல்லிற் சிலம்ப விழைவுடையோர்
காலை விட்டேயகலாதவன் கூவிக் களைத்து விட்டேன்
வாலை யிள மடவாள் துணையானவ வையருளே

## செல்வச் சன்னிதி முருகன்

ஆறுதலை கொண்ட சிவன் அற்புதத்தை நாமறிவோம்
ஆறுதலை உன்தனுக்கும் ஆகுமோ - ஆறுதலைக்
கேட்டேனே வேலாயுத முதலே வந்தருளைக்
காட்டாயோ வாநீ கடிது

## நல்லூர் முருகன்

சித்தர்களும் முத்தர்களும் சிந்தை மகிழ்ந்த இடம்
புத்தழகு நல்லூர் பெருமானே - இத்துயர
வாழ்வு விரும்பிலனுன் திருவடியைச்
சூழ்கின்ற பேறதனைத் தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்துளு அம்பாள்

பொங்கிப் படைக்க புந்தியிலே பொங்கும் இன்பப் பூரிப்பு
அங்குன் அடியே தொழுகையிலே ஆனதுயரம் அன்றொழியும்
தங்க மடம் போற் கோயிலிலே தாயே நின்று காப்பவளே
அங்கன் அழகுப் பாதமலர் அரிய வேறு வழங்குதியேள

## வல்லிபுர ஆழ்வார்

ஆழ்வார்கள் பக்தியிலே ஆகையால் அன்னவர்கள்
ஆள்வாரோ நாடிதனை ஆகையினால் - சூழுமின்பம்
தெய்வ அடி என்றறிவேன் சேயே னுனதடியில்
உய்ய அழைத்தருளை ஊட்டு



Never the sprit was born; the sprit
shall cease to be never,

Never, was time it was not; end and
beginning are dreams!

Birthless and deathless and changeless
remaineth the spirit forever

Death hath not touched it at all
dead though the house of it seems!

Bhagawad Gita
Chapter II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங் குலவிளக்கு

## அமரர் முருகேசு சிவசிதம்பரம்


**அவர்கள் நோயுற்ற போது**
**கண்ணுங் கருத்துமாகக் கவனித்து**
**வேண்டிய உதவி புரிந்தவர்களுக்கும்**
**அன்னார் மறைந்த செய்தி கேட்டு**
**ஓடோடி வந்து எம் சோகத்தில் பங்கு பற்றியவர்கள்,**
**அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள்,**
**பலகாத தூரம் உடன் வந்து**
**அஞ்சலி செலுத்தி இரங்கலுரை இயற்றியவர்கள்**
**அந்திமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள்**
**அனைவருக்கும் எங்கள் நன்றி**

**மனைவி, மக்கள், மருமக்கள்**
**பேரன்மார்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு!
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ அது
இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

—பகவான் ஸ்ரீகிருஷ்ணர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org